## இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை, சென்னை-42
## அவர்களின் செயல்முறை ஆணைகள்

### பிறப்பிப்பவர் :- திரு. கொ. செந்தில்வேல், பி.இ.,

செ.மு.ஆணை எண். அ2/ 6544 / 2023 நாள். 17.05.2023

பொருள் - பணியமைப்பு - மோ.வா.ப.துறை - இத்துறையின் தஞ்சாவூர், அரசு தானியங்கி பணிமனையில் பணிபுரிந்து பணியிலிருக்கும்போது 29.10.2009இல் மறைந்த திரு. N. சந்திரன், சிறப்பு நிலை காவலர் என்பவரது மகளான திருமதி. C. காயத்ரி, என்பவருக்கு கருணையடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கியது - இளநிலை உதவியாளர் பதவியில் அன்னாரது பணியினை வரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை

1. அரசாணை(நிலை) எண். 560 / தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 03.08.1977
2. அரசாணை(நிலை) எண். 73 / தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 26.10.1983
3. அரசாணை(நிலை) எண். 61 / தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 19.07.2016
4. இயக்குநரின் செயல்முறை ஆணைகள் அ2 / 1896 / 2011 நாள் 10.05.2022
5. அரசாணை எண். 80 / தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 02.03.2016
6. அரசாணை எண் 100 / பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 1.8.2018
7. இயக்குநரக ஊ பிரிவு கடித எண். ஊ4/ 2040 / 2023, நாள் 06.03.2023

.........

பார்வை 1 முதல் 3 வரையான அரசாணைகளின்படி பார்வை 4இல் காணும் இயக்குநரது செயல்முறைகள் வாயிலாக இத்துறையின் தஞ்சாவூர், அரசு தானியங்கி பணிமனையில் சிறப்பு நிலை காவலராக பணிபுரிந்து பணியிலிருக்கும்போது 29.10.2009இல் மறைந்த திரு. N. சந்திரன் என்பவரது மகளான திருமதி. C. காயத்ரி என்பவரை இத்துறையின் இயக்குநரகத்தில் கருணையடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து திருமதி. C. காயத்ரி இத்துறையில் 23.05.2022 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

த.பி.பா......

பார்வை 5 மற்றும் 6இல் காணும் அரசாணைகள் வாயிலாக அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்குட்பட்ட பதவிகளில் கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நபர்களது பணியினை அந்தந்த துறைத் தலைவர்களே பணிவரன்முறை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தும், பார்வை 7இல் காணும் பிரோணையைத் தொடர்ந்தும், திருமதி. C. காயத்ரி என்பவர் கருணையடிப்படையிலான பணிநியமனத்திற்கு தேவையான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளதாலும் இளநிலை உதவியாளர் பதவிக்குண்டான விதிகளின் தேவைகளை பெற்றுள்ளதாலும் அன்னாரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில், அன்னார் அப்பதவியில் சேர்ந்த நாளான 23.05.2022 முற்பகல் முதல் முறைப்படுத்தப்பட்டு அந்நாள் முதல் அவர் இரண்டாண்டு அலுவல் காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் இருப்பார் என்றும் அவ்வாறான தகுதிகாண் பருவ காலத்தை அன்னார் முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

**இணைப்பு** : மேற்படி நபரது பணிப்பதிவேடு(one bound register).

(ஒம்/.) கொ. செந்தில்வேல்
இயக்குநர்

பெறுநர்

திருமதி. C. காயத்ரி, இளநிலை உதவியாளர், இயக்குநரகம், சென்னை-42.

நகல்

ஊ பிரிவு கண்காணிப்பாளர் / ஊ பிரிவு இருக்கையாளர்

( திருமதி. C. காயத்ரி, இளநிலை உதவியாளரது பணிப்பதிவேடு(1 தொகுதி) இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது அததனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.)

நகல் - அ2.இ.கோ.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

கண்காணிப்பாளர் 18/05/2023

18/05/2023